
# 4. வடிவியல்

## I. கொள்குறி வகை வினாக்கள்

1. ஒரு முக்கோணத்தின் ஒரு கோணம் மற்ற இரு கோணங்களின் சராசரியாகவும் அதிக அளவுள்ள மற்றும் குறைந்த அளவுள்ள கோணங்களுக்கிடையேயான வித்தியாசம் $60°$ எனில், அது எவ்வகை முக்கோணமாக இருக்கும்?
(1) இருசமபக்க முக்கோணம் (2) சமபக்க முக்கோணம் (3) செங்கோண முக்கோணம் (4) இருசமபக்க செங்கோண முக்கோணம்

2. ஒரு முக்கோணத்தின் வெளிக்கோணம் $80°$. அதன் உள்ளெதிர் கோணங்கள் 2:3 என்ற விகிதத்தில் உள்ளன எனில், அக்கோணங்களின் அளவுகள் ______, ______
(1) $32°, 48°$ (2) $38°, 42°$ (3) $40°, 60°$ (4) $20°, 60°$


3. $\Delta ABC$-ன் மூன்று வெளிக்கோணங்கள் $x, y, z$ எனில், $x+y+z=$______
(1) $180°$ (2) $270°$ (3) $90°$ (4) $360°$




4. படத்தில் உள்ள முக்கோணத்தில் $x$ –ன் மதிப்பு
(1) $35°$ (2) $85°$ (3) $45°$ (4) $75°$

5. ஒரு முக்கோணம் வரைய எத்தனை அளவுகள் தேவை?
(1) 3 (2) 4 (3) 2 (4) 5


6. ஒரு முக்கோணத்தின் இரு கோண அளவுகள் $40°$ மற்றும் $65°$ எனில் பின்வருவனவற்றில் எது முக்கோணத்தின் வெளிக்கோணமாக அமையாது?
(1) $105°$ (2) $140°$ (3) $115°$ (4) $135°$




7. ABCD என்ற இணைகரத்தில், $\Delta DAB \cong \Delta BCD$ என நிறுவ பின்வருவனவற்றில் எதைப் பயன்படுத்த முடியாது?
(1) ப-ப-ப (2) கோ-ப-கோ (3) ப-ப-கோ (4) ப-கோ-ப

8. $\Delta STU, \Delta VWX$ -ல் $ST = VW$, $US = XV$ எனில் SAS கோட்பாட்டின்படி $\Delta STU \cong \Delta VWX$ என நிறுவத் தேவையான கூடுதல் நிபந்தனை யாது?
(1) $\angle S = \angle X$ (2) $\angle T = \angle X$ (3) $\angle S = \angle V$ (4) $\angle U = \angle V$

9. $\Delta ABC \cong \Delta XYZ$ எனில், $\angle B$ மற்றும் YZ ஆகியவற்றின் ஒத்த கோணம் மற்றும் பக்கம் ________
(1) $\angle X$ மற்றும் $AC$ (2) $\angle Y$ மற்றும் $BC$ (3) $\angle Z$ மற்றும் $AC$ (4) $\angle Y$ மற்றும் $AC$




10. $AD$ ஆனது $\angle BAC$ -ன் கோண இருசமவெட்டி மற்றும் $\angle B = \angle C$. பின்வருவனவற்றுள் எந்த நிபந்தனையைப் பயன்படுத்தி $\Delta BDA \cong \Delta CDA$ என நிறுவலாம்?
(1) ப-ப-ப (2) ப-கோ-ப (3) கோ-கோ-கோ (4) கோ-ப-கோ

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக

11. ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல் __________

12. ஓர் இருசமபக்க முக்கோணத்தில் சம பக்கங்களுக்கு எதிரே உள்ள ஒரு கோண அளவு $40°$ எனில் அதன் மிகப் பெரிய கோண அளவு _________

13. முக்கோணத்தின் ஒரு பக்கம் நீட்டிக்கப்படுவதால் ஏற்படும் வெளிக்கோணம் அதன் __________ கோணங்களின் கூடுதலுக்குச் சமம்.

14. சர்வசம வடிவங்களில் ஒன்று மற்றொன்றுடன் _________ பொருந்துகிறது.

15. இரு கோண அளவுகள் சமமெனில், அவை _________ முக்கோணம்.

## III. சரியா, தவறா?

16. ஒரு முக்கோணத்தின் வெளிக்கோணங்களின் கூடுதல் $360°$.

17. ஒரு முக்கோணத்தின் வெளிக்கோணம், குறுங்கோணமாக இருக்க முடியாது.

18. அனைத்து கோண அளவுகளும் $60°$-க்கு கூடுதலாக உள்ளவாறு முக்கோணம் அமைக்க முடியாது.

19. ஒரு முக்கோணத்தின் மூன்று கோண அளவுகளும் மற்றொரு முக்கோணத்தின் மூன்று கோண அளவுகளுக்குச் சமம் எனில், அம்முக்கோணங்கள் சர்வசமமானவை.

20. இரு முக்கோணங்கள் சர்வசமம் எனில், ஒத்த கோணங்கள் சமம்.

## IV. பொருத்துக

| | |
|---|---|
| 21. முக்கோணங்களின் சர்வசமத் தன்மையை நிரூபிக்க முடியாது | $360°$ |
| 22. அனைத்து உள்கோணங்களின் கூடுதல் | வெளிக்கோணம் |
| 23. முக்கோணங்களின் சர்வசமத் தன்மையை நிரூபிக்க முடியும் | $180°$ |
| 24. உள்ளெதிர் கோணங்களின் கூடுதல் | கோ-கோ-ப |
| 25. வெளிக்கோணங்களின் கூடுதல் | கோ-ப-கோ |

LIVEWORKSHEETS